பக்கங்கள்:-26

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 10 | வியாழக்கிழமை | 23.05.2024 | அதிர்வு 296

## தரம் 5 மாணவி பஸ் மோதி பலி

### கம்பளையில் சோகம்



கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பஸ் மோதி பாடசாலை மாணவியொருவர் பலியாகியுள்ளார்.

06▶

# இலங்கையில் நீதி மரணித்துவிட்டது!

## பொலிஸ் அராஜகம் தலைவிரித்தாடுகின்றது என்று நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி. காட்டம்

"இலங்கையில் நடந்த படுகொலைகளுக்கு இதுவரை நீதி வழங்கப்படவில்லை. இங்கு நீதி செத்துவிட்டது. பொலிஸ்அராஜகம்தலைவிரித்தாடுகின்றது.யாழ்ப்பாணத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், சாதாரண பொது மகன் ஒருவரை வாளால் வெட்டும் கொடூர வீடியோக் காட்சி வெளியாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் வேலியே பயிரை மேய்ந்து கொண்டிருக்கின்றது."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

06▶




# கிராம அலுவலர்களின் பிரச்சினைகளுக்கு அரசு உடனடியாகத் தீர்வு காண வேண்டும்!

## நாடாளுமன்றில் அநுரகுமார வலியுறுத்து

கிராம உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளுக்கு அரசால் தீர்வு காணப்படாவிட்டால் எமது தொழில் சார் நடவடிக்கைகள் கடுமையாக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"கிராம உத்தியோகபூர்வ சேவையை ஸ்தாபிக்காமை, தனித்துவமான சம்பளம் கிடைக்காமை, கிராம உத்தியோகத்தர்களுக்குத் தேவையற்ற அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றமை போன்ற பிரச்சினைகள் எழுந்துள்ளன. கடந்த சில நாட்களாக உத்தியோகபூர்வ விடுமுறை மற்றும் பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளைக்

06▶



### தொடர்கின்றது சீரற்ற காலநிலை

## அனர்த்தங்களில் சிக்கி மேலும் மூவர் உயிரிழப்பு



இலங்கையில் சீரற்ற காலநிலை தொடர்கின்றது. இதனால் பலர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பலத்த மழையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் இருவேறு இடங்களில் வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் மீது பாரிய மரங்கள் முறிந்து

06▶




2009 மேயில் யுத்தம் முடிந்த பின்னரும் படைக்கு ஆள் திரட்டி, சண்டப் பிரசண்டம் பண்ணிக் கொண்டிருந்த கொழும்பு ஆட்சி பீடம், அதுபோன்ற ஊதாரித்தனமான செலவுகளின் விளைவை பெரும் பொருளாதார வீழ்ச்சியாகப் படித்துக் கொண்டமையை அடுத்து மெல்லத் தன்னைச் சற்றுத் திருத்திக் கொள்வதற்கு முற்படுவதாகத் தெரிகிறது.

யுத்தத்தின் உச்சியில் 2 லட்சத்து ஐயாயிரம் பேரைக் கொண்டிருந்த இலங்கை இராணுவத்தினரின் எண்ணிக்கை யுத்தம் முடிந்த பின்னரும் உயர்ந்து

06▶



# அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றின் விலை குறைப்பு

லங்கா சதொச நிறுவனம் சில அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களின் விலையைக் குறைத்துள்ளது.

இதன்படி ஒரு கிலோகிராம் நெத்தலியின் விலை 950 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் இந்தியப் பெரிய வெங்காயத்தின் விலை 250 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் லங்கா சதொச ஊடாக ஒரு கிலோகிராம் கொண்டைக் கடலை 450 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

அதேநேரம் ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 275 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.




# காஸா சிறுவர்கள் நிதியத்திற்கு 40 மில்லியன் ரூபா நன்கொடை

காஸா சிறுவர்கள் நிதியத்திற்கு 40 மில்லியன் ரூபா நன்கொடை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சீனங்கோட்டை பள்ளிவாசல் சங்கம், சீனங்கோட்டை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் சங்கம் உள்ளிட்ட பலரது நிதிப்பங்களிப்புடன் காஸா சிறுவர் நிதியத்திற்கு 40,198,902 ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

சீனங்கோட்டை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பலீல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதி அலுவலகத்தில் இதற்கான காசோலையை நேற்று முன்தினம் கையளித்தார்.

# குறைவான பெறுமதிக்கு தனியார் முதலீட்டிற்காக அரசாங்க நிறுவனங்களை வழங்கப்போவதில்லை

## இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னான்டோ தெரிவிப்பு



"அரசாங்கத்தின் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு உட்பட்டே தனியார் துறையின் முதலீடுகளுக்காக அரச நிறுவனங்கள் வழங்கப்படும். மதிப்பிடப்பட்ட தொகைக்கு குறைவான தனியார் முதலீடுகளுக்கு அரச நிறுவனங்களை வழங்க வேண்டாமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்."

– இவ்வாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அருந்திக்க பெர்ணான்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள பல நிறுவனங்களுக்கு முதலீட்டாளர்களைக் கண்டறிந்து அவற்றை ஒழுங்கான முறையில் பராமரிக்க அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தது. இதன்படி, ஹில்டன் ஹோட்டல் போன்ற நிறுவனங்களுக்கு அந்த முதலீடுகளை வெளிப்படைத்தன்மையுடன் பெற்று, அதன் மூலம் அரசாங்க திறைசேரியைப் பலப்படுத்தவும், ஊழியர்களுக்கு பங்குகளை வழங்கவும், நிறுவனத்தை ஒழுங்கான முறையில் பராமரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முதலீடுகளுக்கு அரசின் மதிப்பீட்டை விட அதிக பெறுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரச நிறுவனங்களுக்கு மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கீழ் தனியார் முதலீடுகளை வழங்க வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். இதன்படி, எந்தவொரு தனியார் முதலீட்டாளரும் அரசாங்கத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியை விட குறைவான விலையில் அரச நிறுவனத்தை பெற்றுக்கொள்ள வாய்ப்பில்லை.

மேலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் பாரிய எவு கடனைக் கொண்டுள்ளது. அதில் ஒரு பகுதியை அரசாங்கம் ஏற்றுக்கொண்டாலும், விமான நிறுவனத்திற்கு வரும் முதலீட்டாளர் மீதி கடனைத் தாங்கும் அளவுக்கு வலிமையுடன் இருக்க வேண்டும். அதுமட்டுமின்றி கொழும்பு ஹயட் ஹோட்டல், கிறிஷ் மற்றும் டெஸ்டினி திட்டங்களுக்கு பெறுமதியான அரச காணிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது, அந்த முதலீட்டாளர்கள் அந்த திட்டங்களை கைவிட்டுவிட்டனர். கிறிஷ் திட்டத்தில் பாழடைந்த கட்டடத்துடன் சுற்றுச்சூழல் பிரச்சினை மாத்திரமே எஞ்சியுள்ளது.

அத்துடன், கொழும்பு ஹயட் ஹோட்டல் திட்டத்திற்கு 60 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது. அது இந்நாட்டு மக்களின் பணம் என்பதைக் கூற வேண்டும். இந்த ஹயட் ஹோட்டல் திட்டத்துடன் தொடர்புடைய மேலும் 35 மில்லியன் டொலர்கள் கடனை செலுத்த வேண்டியுள்ளது. கொழும்பு நகரில் உள்ள மிகவும் பெறுமதியான காணி இதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தை தொடரப் பொருத்தமான முதலீட்டாளர் கிடைக்காவிட்டால், அரச திறைசேரியில் இருந்து செலவழித்து முப்படைகளின் பங்களிப்புடன் நிர்மாணப் பணிகளை முடிக்க எண்ணியுள்ளோம்.

மேலும் அடுத்த சில மாதங்களில் பெருமளவிலான வெளிநாட்டு முதலீடுகள் இந்நாட்டிற்கு வரும் என நம்புகிறோம். கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீண்டுள்ள நிலையில், இந்நாட்டில் வெளிநாட்டுக் கையிருப்பின் அளவு அதிகரித்துள்ளது.

அத்துடன், நிறுத்தப்பட்டிருந்த பிரதேச அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிக்கவும் நிதி வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி முன்னெடுத்த வேலைத்திட்டத்தின் ஊடாக ஏற்பட்ட பொருளாதார வலுவூட்டல் காரணமாக அஸ்வெசும சமூக நலன்புரித் திட்டத்திற்கு சமுர்த்தியை விட மூன்று மடங்கு தொகையை ஒதுக்கீடு செய்ய முடிந்துள்ளது.

அத்துடன் உரிமம் பெற்ற காணிகளுக்கு முழுமையான காணி உறுதிகளை வழங்கும் உறுமய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற பல பணிகள் அரசாங்கத்தால் செயல்படுத்தப்பட்டு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பின்னணியில், வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்த தலைவராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென நாம் நம்புகின்றோம்." – என்றார்.

# ஹட்டனில் மரக்கிளை முறிந்து வீழ்ந்ததில் ஒருவர் படுகாயம்!



(செ.தி.பெருமாள்)

ஹட்டன் – பொகவந்தலாவ பிரதான வீதியில் வனராஜா பகுதிக்கு அருகில் மரக்கிளை முறிந்து வீழ்ந்ததில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தப் பகுதியில் தொடர்ச்சியாகக் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்ற நிலையில் மரக்கிளை ஒன்று நேற்று மாலை முறிந்து வீழ்ந்துள்ளது.

இந்த வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் மரக் கிளை வீழ்ந்ததில் படுகாயமடைந்த நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் என்று ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

# மன்றில் மணிவண்ணனிற்கு வகுப்பெடுத்த சுமந்திரன்!





(ந.லோகதயாளன்)

சட்டத்தரணி வி.மணிவண்ணனிற்கு ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வைத்து நேற்றைய தினம் வகுப்பெடுத்தார்.

இந்த ஆண்டு அறிமுகமான நீதிமன்றங்கள், நியாய சபைகள் மற்றும் நிறுவனங்களை அவமதிக்கும் சட்ட ஏற்பாட்டின் கீழ் நீதிமன்றை அவமதித்தார் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளருக்கு எதிராக சட்டத்தரணி வி.மணிவண்ணனால் தொடுக்கப்பட்ட வழக்கில் அவர் தனக்கு தானே முன்னிலையாகி நீதிமன்றத்தில் வாதாடியபோதே இவ்வாறு இடம்பெற்றது.

இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், எதிராளி தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தனது வாதத்தின்போது, சிறுகோரிக்கை நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, சிறுகோரிக்கை நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்யப்பட வேண்டுமே அன்றி மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யமுடியாது என்றார்.

இந்த வழக்கை விசாரணை செய்யும் நியாயாதிக்கம் மாவட்ட நீதிமன்றிற்கு கிடையாது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேநேரம் இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் வி.மணிவண்ணன் வழக்காளியேயன்றி சட்டத்தரணி அல்லர். ஆகவே சட்டத்தரணிகளிற்கான கறுப்பு உடை, அங்கியோடு அவர் மன்றில் தோன்றி இந்த வழக்கில் வாதாட முடியாது எனத் தனது தரப்பு வாதத்தை முன்வைத்தார்.

இதன்போது கறுப்பு உடையில் தோன்ற முடியாது என்ற வாதத்தை நீதிபதியும் ஏற்றுக் கொண்டார்.

இருப்பினும் இம்முறை மட்டும் இந்த வழக்கில் அதனைப் புறநடையாக அனுமதித்துக் கொண்டு, இந்த வழக்கின் இனி வரும் தவணைகளில் அவ்வாறு தோன்ற முடியாது என்ற நிலைப்பாட்டை நீதிமன்றம் எடுக்கலாம் என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றத்தின் முன் விநயமாக சமர்ப்பணம் செய்தார்.

இதேநேரம் வழக்காளியாகத் தனக்குத் தானே வாதாடிய வி.மணிவண்ணன், மாநகர ஆணையாளர் வழக்கு இடம் பெறும் விடயம் தொடர்பான கடிதத்தை மாவட்ட நீதிமன்ற பதிவாளரிற்கே அனுப்பி வைத்துள்ளமையால் இந்த வழக்கை விசாரணை செய்யும் நியாயாதிக்கம் மாவட்ட நீதிமன்றிற்கு உண்டு எனத் தனது வாதத்தை முன்வைத்தார்.

இந்த வழக்கை ஆராய்ந்த மாவட்ட நீதிபதி சி.சதீஸ்கரன் இவ்வழக்கிற்கான கட்டளை எதிர்வரும் 27 ஆம் திகதி வழங்கப்படும் எனத் தெரிவித்து வழக்கை 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

# பலாங்கொடையில் மரம் முறிந்து வீழ்ந்ததில் குடும்பஸ்தர் மரணம்!



(எம்.எவ்.எம். அலி)

பலாங்கொடை, ஹெரமிட்டிகல பகுதியில் வீசிய பலத்த காற்று காரணமாக வீடொன்றின் மீது மரம் முறிந்து விழுந்ததில் இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பலாங்கொடை, ராசகல – ஹெரமிட்டிகல 54ஆம் பிரிவைச் சேர்ந்த 44 வயதுடைய த.சுப்பிரமணியம் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

INDSRI FERRY

## வருந்துகின்றோம்

தவிர்க்கமுடியாத கடல் போக்குவரத்து விதிமுறைகளினாலும் காலநிலை மாற்றங்களினாலும் எமது திட்டமிட்ட நாகை – காங்கேசன் – நாகை பயணிகள் கப்பல் சேவையினை இயக்கமுடியவில்லை.

**மிக விரைவில் புதிய பயணத் திகதிகள் அறிவிக்கப்படும்.**

**இதுவரை பயணச் சீட்டை பெற்றவர்கள் செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளோம்.**

மேலும் விவரங்கள் தேவையெனில் customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.



IndSri Ferry Services Pvt Ltd
# 143/1, Uttamar Gandhi Road, Opp The Park Hotel,
Thousand Lights West, Nungampakkam,
Chennai - 600034, Tamil Nadu, India.

Google play | Download on the App Store

W: www.sailindsri.com

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொண்டே சென்றது.

2020 - 21 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து, படைக்குறைப்பைத் தொடங்கியது இராணுவம். இப்போது அதன் எண்ணிக்கை ஒரு லட்சத்து 61 ஆயிரம். 2030 இல் இதை ஒரு லட்சமாகக் குறைக்கத் திட்டம் என்று கடந்த ஆண்டு இலங்கை அரசு அறிவித்திருந்தமை தெரிந்ததுதான்.

யுத்தத்தின் பின்னர் இராணுவத்தை விட்டு சொல்லிக் கொள்ளாமல் தப்பி ஓடிய 15 ஆயிரத்து 567 பேரை படைகளை விட்டு விலகியவர்களாக அங்கீகரித்துக் கருதும் முடிவையும் இராணுவம் கடந்த வாரம் எடுத்திருக்கின்றது.

\+ + +

தலைமைப் போட்டிப் புயலுக்குள் சிக்கி கிடக்கின்றது சிறிலங்கா சுதந்திரக் கட்சி.

அதற்கு இடையில், தாங்களே சுதந்திர கட்சியின் சட்டபூர்வமான நிர்வாகிகள் என்று கூறிக் கொள்ளும் சந்திரிகா அணியினர் - பதில் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவினர் - தங்கள் எடுப்பைக் காட்டும் விதத்தில் வரும் 8 ஆம் திகதி அம்பாந்தோட்டை மாவட்டம் அம்பலாந்தோட்டையில் பெரிய பொதுக்கூட்டம் ஒன்றை நடத்திக் காட்டத் தயாராகி வரு கின்றனர் என்று கூறப்படுகின்றது.

அந்த அணியில் சிரேஷ்ட உப தலைவர் பதவியில் இருக்கும் விவசாய, பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவே இந்தப் பொதுக்கூட்டத்துக்கான தயார்படுத்தல்களை செய்து வருகின்றார்.

அந்தத் தரப்புடன் அரசியல் கூட்டு சேரும் கட்சிகளின் பிரமுகர்களும் அந்த மேடையில் காட்சி தருவர் என்று கூறப்படுகின்றது.

இதற்குப் போட்டியாக மற்றைய தரப்பு - மைத்திரிபால சிறிசேன, விஜயதாஸ ராஜபக்ஷ அணி - என்ன செய்யப் போகின்றது?

நீதிமன்றத்தைக்கட்டிப்பிடித்துஅல்லாட வேண்டிய இக்கட்டில் - சிக்கலில் - மாட்டியிருக்கும் அந்த அணி வேண்டுமானால் அம்பலாந்தோட்டைக் கூட்டத்துக்கு நீதிமன்றம் மூலம் ஒரு தடை உத்தரவு வாங்க எத்தனிக்கலாம். அதைக் கூட கடைசி நேரத்தில் வாங்கினால்தான், எதிர்த்தரப்பு உஷாராகி மேல்நிலை நீதிமன்றத்தில் தடை உத்தரவுக்குத் தடை வாங்காமல் பார்த்துக் கொள்ள முடியும்.

பார்ப்போம் என்ன செய்வார்கள் என்று.

## கிராம அலுவலர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கிராம உத்தியோகத்தர்களின் மேற்கொண்டு வருகின்றனர்.

கிராம உத்தியோகத்தர்களின் சேவையானது எட்டு மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை. நீண்டகாலமாக அவர்களது தொழில்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை." - என்றார்.

# ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை




மொரந்துடுவ - நாந்துவ பகுதியில் ஒருவர் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரது சகோதரி மற்றும் கணவரிடையே ஏற்பட்ட குடும்பத் தகராறை தீர்த்துவைக்க முயன்ற போது இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சகோதரியின் கணவர் மற்றும் அவரது தந்தை ஆகியோர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

44 வயதான ஒருவரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## தரம் 5 மாணவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தத் துயரச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

பேரவிலயிலிருந்து கம்பளை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த பஸ்ஸே, உடஹேந்தன்ன சேனாதீர தேசிய பாடசாலைக்கு முன்னால் மாணவி மீது மோதியுள்ளது.

படுகாயமடைந்த தரம் 5 இல் கல்வி பயிலும் ஹன்சமாளி என்ற 10 வயது மாணவி, குருந்துவந்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

மாணவியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக குருந்துவந்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## அனர்த்தங்களில் சிக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வீழ்ந்ததில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் ஆண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை, இரத்தினபுரி - பலாங்கொடை பிரதேசத்தில் மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பலத்த மழையுடனான காலநிலையால் 15 மாவட்டங்களைச் சேர்ந்த 67 ஆயிரத்து 591 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்திலேயே அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலத்த மழையால் 12 நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்று நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டை ஊடறுத்து தென்மேற்கு பருவப் பெயர்ச்சி அதிகரிப்பதால், காற்றுடன் கூடிய மழை தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

கடும் காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, 9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, காலி, குருநாகல் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் நீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியால் பொருளாதாரம், சட்டம் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்த சிறீதரன் எம்.பி., மேலும் பேசுகையில்,

"மிருசுவில் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான குற்றவாளிக்கு இலங்கைச் சட்டம் மரணதண்டனை வழங்கியது. ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்தவுடன் அந்தப் பிரதான குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு வழங்கினார். இது இலங்கையின் நீதித்துறையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

இந்த நாட்டில் மிகப் பெரிய கொலைக் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. அவர்களுக்கு விடுதலை வழங்கப்படுகின்றது.

இலங்கையில் நடந்த படுகொலைகளுக்கு இதுவரை நீதி வழங்கப்படவில்லை. பலரும் நீதிக்காகப் போராடி வருகின்றனர். இங்கையில் நீதி செத்துவிட்டது. ஆனால், நாட்டில் புதிய சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன.

அதேவேளை, இந்த நாட்டிலே பொலிஸ் அராஜகம் தலைவிரித்தாடுகின்றது. யாழ்ப்பாணத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், சாதாரண பொதுமகன் ஒருவரை வாளால் வெட்டும் கொடூர வீடியோக் காட்சி வெளியாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் வேலியே பயிரை மேய்ந்து கொண்டிருக்கின்றது.

இலங்கையில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், சுற்றறிக்கை ஒன்று வெளியிடும்போது தனிச் சிங்கள மொழியில் மட்டும் வருகின்றது. அண்மையில் ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை கூட தனிச் சிங்களத்தில் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது.

சட்டம் என்பது இனத்துக்கானது அல்ல. அது மொழிக்கானது அல்ல. நாட்டில் வாழுகின்ற அனைத்து இனங்களையும் அரவணைத்துச் செல்லக்கூடியவாறு சட்டம் இருக்க வேண்டும். இல்லையேல் அது சட்டம் அல்ல. இந்த நாட்டினுடைய சட்டத்துறை நம்பிக்கை தரக்கூடியதல்ல. அது சகல இனங்களையும் அரவணைத்துச் செல்லவில்லை.

கஞ்சிப்பானையைத் தூக்கியெறியும் பொலிஸாருடைய காலத்தில் எப்படி இந்த நாட்டில் நல்லிணக்கமும், நீதியும், நியாயமும் கிடைக்கும்?" - என்று சிறீதரன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.



# இரண்டு புதிய சட்டமூலங்கள் நேற்று முதலாம் வாசிப்புக்காகச் சமர்ப்பிப்பு

பொருளாதார நிலைமாற்றம் மற்றும் பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டமூலங்கள் முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டன.

முதலீட்டாளர்கள், பொது நிதி முகாமைத்துவத்திற்கு சாதகமான சூழலை ஏற்படுத்தும் பல ஏற்பாடுகள் இந்த சட்டமூலங்களில் அடங்கியுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டமூலத்தினூடாக நாட்டில் முதலீட்டு நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் பொருளாதாரத்தை துரிதப்படுத்துவதற்காகவும் 5 புதிய நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# புத்தளத்தில் மரங்கள் வீழ்ந்து இரு பெண்கள் பரிதாபச் சாவு



(ரஸீன் ரஸ்மின்)

சீரற்ற காலநிலை நிலை காரணமாக புத்தளம் - மாரவில மற்றும் மாதம்பைப் பகுதிகளில் வீதியோரத்தில் இருந்த இரண்டு பெரிய மரங்கள் வீழ்ந்ததில் பெண்கள் இருவர் உயிரிழந்துள்ளதுடன், ஆண் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாராவில - பிலாகமுல்ல பிரதேசத்தில் வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது பாரிய மரமொன்று வீழ்ந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் , நாத்தாண்டிய - உடுவல வீதியின் முட்டிபெதிவில பகுதியைச் சேர்ந்த யடவரகே தொன் ஹன்சி இஷாரா (வயது 36) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்த குறித்த பெண் திருமணமான ஒரு குழந்தையின் தாயாவார்.

இதேவேளை, மாதம்பை குளியாபிட்டிய வீதியின் சுதுவெல்ல பிரதேசத்தில் மரமொன்று வீழ்ந்ததில் வீதியில் பயணித்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

தும்லசூரிய - உடலவெல பகுதியைச் சேர்ந்த நிசன்சலா சரோஜனி (வயது 38) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாரவில மற்றும் மாதம்பை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு 278 கைதிகளுக்கு பொது மன்னிப்பு



278 கைதிகளுக்கு விசேட பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு விசேட பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

இவர்களில் 10 பெண் கைதிகளும் அடங்குகின்றனர்.

ஜனாதிபதியினால் இந்த விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# உலகம் ஏற்காத கொடூரம்

ஈவிரக்கமற்ற முறையில் பல்லாயிரம் அப்பாவிப்பாலஸ்தீனியர்களைக்கொன்றொழித்து, பெரும் அரச பயங்கரவாதத்தைத் தொடர்ந்து புரிந்து வரும் இஸ்ரேலை, அதன் காரணமாக அதன் நேச சக்திகளே குரூர அரசாகவும், தேசமாகவும் கருதிக் கைவிடும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இஸ்ரேலின் எல்லை மீறிய, மிருகத்தனமான, கொடுங்கோன்மைப் போக்கை இனியும் பார்த்துக் கொண்டு அமைதி காத்தால் நவநாகரீக உலகில் மனிதாபிமானமே இல்லாத குரூர அரசுகளாகவும் நாடுகளாகவும் சர்வதேசம் தங்களை அடையாளம் கண்டு புறமொதுக்கும் ஏளன நிலைமை ஏற்படும் என்பதை உணர்ந்து கொண்டு, மேற்கு நாடுகள் - குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் - தனித்துவமாகச் சிந்தித்து, தம்பாட்டில் நடவடிக்கை எடுத்து, விலக முஸ்தீபு செய்து வருகின்றன.

மனித நாகரீகத்துக்கே ஒப்பில்லாத கொடூரங்களை புரிந்து வரும் இஸ்ரேலிய சியோனிஸப் போக்காளர்களுடன் தங்களை அடையாளப்படுத்தி நிற்க விரும்பாத ஐரோப்பிய நாடுகள், இஸ்ரேல் ஆதரவு அணி என்ற அமெரிக்க அனுசரணையுடனான கூட்டிலிருந்து மெல்ல நழுவத் தயாராகி வருகின்றன.

இஸ்ரேலின் விருப்புக்கு மாறாக அயர்லாந்து, ஸ்பெயின், நோர்வே ஆகியவை பாலஸ்தீனத்தை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிக்கும் தங்கள் தீர்மானம் வரும் செவ்வாய்க்கிழமையில் இருந்து நடைமுறைக்கு வருவதாக ஒருதலைப் பட்சமாக அறிவித்திருக்கின்றன. இது பலஸ்தீனத்தைக் குண்டுமாரி பொழிந்து அழித்தொழிக்கும், இஸ்ரேலின் மிகக் கொடூரமான அரச பயங்கரவாதத்தை மேற்கு நாடுகள் இனிமேலும் சகித்துக் கொள்ள மாட்டா என்பதற்கான கட்டியம்தான். ஆரம்ப அறிகுறிதான்.

இந்த மூன்று நாடுகளின் முடிவை அடுத்து டப்பிளிங், மட்றிட், ஒஸ்லோ ஆகியவற்றுக்கான தனது தூதுவர்களை இஸ்ரேல் மீள அழைத்துக் கொண்டாலும், இஸ்ரேலின் அந்தத் தீர்மானம் ஐரோப்பிய நாடுகளில் உருவாகி வரும் இஸ்ரேலின் அராஜகத்திற்கு எதிரான சீற்றத்தைக் குறைக்க மாட்டாது என்பதுதான் அவதானிகள் கருத்து.

1988 லிருந்து பலஸ்தீனிய தனி நாட்டை ஐ.நாவில் அங்கம் பெற்றுள்ள 193 நாடுகளில் 139 நாடுகள் அங்கீகரித்துள்ளபோதிலும், மேற்கு நாடுகள் - குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் - அதனைச் செய்யாமல் பின்னடித்து வருகின்றன.

ஆனால் இப்போது 3 ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் - அயர்லாந்து, நோர்வே, ஸ்பெயின் ஆகியவை - பலஸ்தீன தனி நாட்டை அங்கீகரிப்பதன் மூலம் இஸ்ரேலுக்கு காட்டமான ஒரு செய்தியை தெரிவிக்க விரும்புகின்றன என்பது துலாம்பரமானது. இஸ்ரேலின் அரச பயங்கரவாதத்தை மேற்கு நாடுகள் இதற்கு மேலும் சகித்துக் கொள்ளத் தயாரில்லை என்பதுதான் அந்தக் கடுமையான செய்தி.

இதனைத் தொடர்ந்து இத்தகைய அறிவிப்பை - பலஸ்தீன தனிநாட்டை அங்கீகரிக்கும் முடிவை - மோல்டா நாடும் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரிட்டனும் ஆஸ்திரேலியாவும் இந்தப் போக்கைத் தாங்களும் பின்பற்றலாம் என்று கோடி காட்டி இருக்கின்றன எனவும் கூறப்படுகின்றது.

ஜேர்மனி இது விடயத்தில் முடிவெடுப்பதற்கு கூடிய உரையாடல், கலந்தாலோசனை தேவை எனக் குறிப்பிட்டுள்ளது. எனினும் பிரான்ஸ் எந்தவிதமான அங்கீகாரத்தையும் பலஸ்தீனத்திற்கு உடனடியாக வழங்கத் தயார் இல்லை எனத் தெரிகிறது.

“பலஸ்தீன நாட்டை ஒருதலைப் பட்சமான அறிவிப்பு, அங்கீகாரம் மூலம் அடைய முடியாது. அதைப் பேச்சுவார்த்தை மூலமே எட்ட வேண்டும்” - என்று கூறுகின்றார் இஸ்ரேலின் தோன்றாய் துணையாய் விளங்கும் அமெரிக்காவினுடைய அதிபர் ஜோ பைடன்.

இஸ்ரேலுக்கான தனது பாரம்பரிய ஆதரவை அமெரிக்க அதிபர் தொடர்ந்து உறுதிப்படுத்தினாலும், மனித குல நாகரீகத்திற்குமுரணாகஅப்பாவிப்பலஸ்தீனியர்களை மிருகத்தனமாக - காட்டுமிராண்டித்தனமாக - கொன்றொழிக்கும் இஸ்ரேலுடன் அணிவகுத்து நிற்பது அமெரிக்காவின் கௌரவத்துக்கு இழுக்கு என்பது அமெரிக்க அதிபருக்கும் புரியத் தொடங்கி இருக்கும் என்பது தெளிவானது.

இனியும் இஸ்ரேலுடன் தோள் கொடுத்து நிற்கும் நாடுகள், மனித நாகரீகத்திற்கும் பகுத்தறிவுக்கும் இடம் கொடுக்கா காட்டுமிராண்டி ஆட்சிகளாகவே உலக மக்களினால் நோக்கப்படும்.

# இந்தியாவில் புதிய கொரோனா தொற்றுப் பரவல் முகக்கவசம் அணியுமாறு மக்களுக்கு அறிவுறுத்தல்



சிங்கப்பூரில் தற்போது பரவத் தொடங்கிய புதிய வகை கொரோனா, இந்தியாவின் சில பகுதிகளில் பதிவாகி உள்ளதால்,பொதுமக்களை முகக்கவசம் அணிந்து கொள்ளுமாறு தமிழக சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இந்தியாவில் புதிதாக 324 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதில் 290 பேருக்கு கே.பி.2 வகை கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், 34 பேருக்கு கே.பி.1 வகை கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக மேற்கு வங்காளத்தில் ராஜஸ்தான், உத்தரகாண்டில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும் அச்சமோ, பதற்றமோ தேவையில்லை எனவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வது சிறந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதியவர்கள், கர்ப்பிணிகள் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் மோடியின் கருத்துக்கு முதல்வர் ஸ்டாலின் கண்டனம்



"வாக்குக்காகத் தமிழ்நாட்டையும் தமிழர்களையும் அவதூறு செய்வதைப் பிரதமர் நரேந்திர மோடி நிறுத்திக் கொள்ள வேண்டும்."

- இவ்வாறு தமிழக முதலழமைச்சர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஒடிசாவில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய மோடி "வீட்டு சாவி தொலைந்தால், ஜெகன்நாதரை வணங்கிவிட்டுத் தேடினால் அடுத்த சில மணிநேரத்தில் சாவி கிடைத்துவிடும். ஆனால், இங்கு ஜெகன்நாத் கோயிலின் கருவூலமான ரத்ன பண்டரின் சாவி காணாமல் போய் ஆறு வருடங்கள் ஆகிவிட்டன.

அந்த சாவி தமிழ்நாட்டுக்கு சென்றுவிட்டதால், அது தொடர்பான விசாரணை அறிக்கை ஆறு வருடங்களாக வெளியிடப்படாமலிருக்கிறது." என்று கூறியிருந்தார்.

இந்த கருத்தானது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த தமிழக முதலமைச்சர் ஸ்டாலின்

"தேர்தல் பரப்புரையில் நாகரிக வரம்புகளை மீறாமல், கொள்கை, கோட்பாடுகள், செயல்திட்டங்கள்மீது ஆக்கப்பூர்வமான விமர்சனங்களையும் தங்களது ஆட்சியின் சாதனைகளையும் முன்வைத்து வாக்கு சேகரிப்பதில் முன்னுதாரணமாகத் திகழ வேண்டிய பிரதமர் நரேந்திர மோடி, வெறுப்புப் பேச்சுகளின் மூலம் மக்களிடையே பகை உணர்வையும், மாநிலங்களுக்கு இடையே குரோதத்தையும் தூண்டி வருவது நாட்டுக்கு நல்லதல்ல.

தமிழ்நாட்டுக்கு வரும்போது தமிழ்மொழியை உயர்வாகப் போற்றுவதாகப் பேசுவதும், தமிழர்களைப் போன்ற அறிவாளிகள் இல்லை என்று பாராட்டுவதும், அதேநேரத்தில் ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், ஒடிசா போன்ற மாநிலங்களில் வாக்கு சேகரிக்கும்போது தமிழ்நாட்டு மக்களைத் திருடர்களைப் போலவும், வெறுப்பு மிகுந்தவர்களாகவும் அந்த மாநிலங்களுக்கு எதிரானவர்களாகவும் பேசுவது இரட்டை வேடம்.

இதை மக்கள் புரிந்து கொள்வார்கள். வாக்குக்காகத் தமிழ்நாட்டையும் தமிழர்களையும் அவதூறு செய்வதைப் பிரதமர் நிறுத்திக் கொள்ள வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

# தமது தேசத்தை அங்கீகரிக்கத் தயாராகும் நாடுகளை வரவேற்கின்றது பாலஸ்தீனம்






நோர்வே, அயர்லாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகள் பாலஸ்தீன தேசத்தை அடுத்த வாரம் அங்கீகரிக்கவுள்ளதாக அறிவித்துள்ளன.

இந்த நிலையில், பாலஸ்தீன தேசம் என்ற ஒன்று இல்லாமல் மத்திய கிழக்கில் அமைதி நிலவப்போவதில்லை என நோர்வேயின் பிரதமர் ஜொனஸ் கர் ஸ்டோர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மே 28ஆம் திகதி நோர்வே பாலஸ்தீன தேசத்தை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு தேசம் என்னும் தீர்வே மத்திய கிழக்கில் அமைதிக்கு அவசியமான விடயம் என தெரிவித்துள்ள பல ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீன தேசத்தை அங்கீகரிக்கவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மேற்படி நாடுகளின் அறிவிப்பினையடுத்து, அந்த நாடுகளிற்கான தமது தூதுவர்களை இஸ்ரேல் உடனடியாக மீள அழைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பாலஸ்தீன தேசத்தினை அங்கீகரிப்பதற்காக ஸ்பெயின், நோர்வே மற்றும் அயர்லாந்து எடுத்த முடிவுகளை வரவேற்பதாக பாலஸ்தீன வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிக்கையொன்றினையும் வெளியிட்டுள்ளது.

மேலும், இந்த நடவடிக்கையின் மூலம், ஸ்பெயின், நோர்வே மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் இரு நாடுகளின் தீர்வு மற்றும் பாலஸ்தீன மக்களுக்கு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள நீதியை வழங்குவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளன என பாலஸ்தீன வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த விடயம் இஸ்ரேலிய சட்டவிரோத ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை அடைவதற்கும் அனைத்து சர்வதேச முயற்சிகளுக்கும் சாதகமாகப் பங்களிக்கும் என பாலஸ்தீன வெளியுறவுத்துறை அமைச்சகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# பிரேசிலில் டெங்கு பாதிப்பு; 1 லட்சத்தைத் தாண்டியது



பிரேசிலில் இதுவரை இல்லாத வகையில் டெங்கு பாதிப்பு அதிகரித்து காணப்படுகிறது என காதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இந்த ஆண்டில் இதுவரை டெங்குவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 51 லட்சத்தை தாண்டியுள்ளது.

அதன்படி சமீபத்திய தரவுகளின்படி, பிரேசிலில் 51 லட்சத்து 45 ஆயிரத்து 295 டெங்கு பாதிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் இதுவரை டெங்குவால் 2,899 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பிரேசிலின் சில அண்டை நாடுகளிலும் டெங்கு காய்ச்சல் அதிகமாக பரவத் தொடங்கியுள்ளது.

காலநிலை மாற்றம் போன்ற காரணிகளே டெங்கு காய்ச்சல் அதிகரிப்புக்கு காரணம் என்று சுகாதார அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது



# நாட்டின் பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதே முதல் பணி

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே எனது முதல் பணியாக இருந்தது. எதிர்வரும் நான்கைந்து வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்திற்கு எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களை விரைவாக எடுக்க வேண்டியிருந்தது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்ல அக்குரேகொட, பாதுகாப்பு அமைச்சு வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கை முன்னாள் படைவீரர்கள் சங்கத்தின் தலைமையக வளாகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து முன்னாள் படைவீரர்களின் இல்லத்தைத் திறந்து வைத்த ஜனாதிபதி, புதிய தலைமையக வளாகத்தை பார்வையிடவும் இணைந்து கொண்டார்.

இரண்டாவது உலகமாக யுத்தத்தின் போது சேவையில் இருந்து விலகிய மற்றும் ஓய்வுபெற்ற முப்படையினரால் 1944 ஆம் ஆண்டு இலங்கை முன்னாள் படைவீரர் சங்கம் உருவாக்கப்பட்டது. இந்த சங்கத்திற்கு குறைபாடாகக் காணப்பட்ட தலைமை அலுவலக கட்டடம் சங்கத்தினதும் இராணுவத்தினதும் நிதிப் பங்களிப்பில் நிறுவப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில் –

“இலங்கை முன்னாள் படைவீரர்கள் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பொருளாதார ரீதியில் நாம் இன்னும் கஷ்டமான நிலையில்தான் இருக்கிறோம். அடுத்த இரண்டு ஆண்டுகளில் அந்த நிலையில் இருந்து மீண்டு வரக்கூடிய திறன் எங்களிடம் உள்ளது.

படைவீரர் கிராமங்களில் வாழும் படைவீரர்களுக்கு இன்னும் காணி உரிமை கிடைக்கவில்லை என்பதை அறிந்தேன்.





காணி உறுதி வழங்குவதாக சிலர் வாக்குறுதி அளித்தனர். ஆனால் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. எனவே, எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் இப்பணிகளை நிறைவு செய்து உறுமய தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் அனைவருக்கும் நிரந்தர காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கு ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், ரணவிரு சேவா அதி



கார சபையின் தலைவர் மற்றும் காணி ஆணையாளர் ஆகியோர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன்படி உறுமய தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இப்பணிகள் இந்த ஜூலை மாதத்திற்குள் நிறைவு பெறும் என்பதில் எந்த சந்தேகமில்லை.

மேலும், இராணுவத்தில் இருந்து விலகிச் செல்வோர் தொடர்பில் என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தியுள்ளோம். அவர்களுக்கு புதிய வருமான வழிகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் என்ன என்பதை அவர்கள் கண்டறிய வேண்டும். அந்த வாய்ப்பு இல்லாததால், சிலர் ரஷ்யா செல்ல முடிவு செய்தனர். ஒருவரது திறமைக்கேற்ப, நாட்டிலோ வெளிநாட்டிலோ நல்ல வருமானம் ஈட்டும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்,

12






# நாட்டின் பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதே முதல் பணி

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்பு அமைச்சு மற்றும் ரணவிரு சேவா அதிகார சபை இணைந்து அதற்கான விசேட வேலைத்திட்டத்தை முன்மொழியுமாறு பணிப்புரை விடுத்துள்ளேன்.

இராணுவப் பணியில் இருந்து ஓய்வு பெறும் வீரர்கள் மத்தியில் விசேட திறமைகள் உள்ளன. நாட்டின் பொருளாதார வளர்ச்சியுடன், அவர்களுக்கு புதிய வாய்ப்புகளை வழங்க வேண்டும். படை வீரர்கள் அன்று நாட்டை பாதுகாத்ததன் காரணமாகவே இன்று நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பு எமக்கு கிடைத்துள்ளது.

இன்னுமொரு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்ததன் பின்னர் தான் நாம் இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளோம். நாட்டின் ஒற்றுமைக்கு பயங்கரவாதம் பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. மேலும், நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதாரச் வீழ்ச்சி, நாட்டின் ஒற்றுமைக்கு



மற்றொரு அச்சுறுத்தலாக மாறியது. இந்நிலை நீடித்தால் நமது நாடு பொருளாதாரம் இல்லாத நாடாக அதாவது இன்னொரு லிபியாவாக மாறிவிடும்.

நாட்டைப் பொறுப்பேற்ற பின், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே எனது முதல் பணியாக இருந்தது. அத்துடன் எதிர்வரும் நான்கைந்து வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்திற்கு எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களை விரைவாக எடுக்க வேண்டியிருந்தது. போரின் போது, "போரை இழுத்தடிப்பது நல்லதல்ல, அதை தந்திரமாக முடிக்க வேண்டும். போரிலும், பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதிலும் அதற்கேற்ப செயல்பட வேண்டும்." என்றேன்.

நமது நாடு தற்போது பொருளாதார ரீதியில் முன்னேற்றம் கண்டு வருகிறது. வங்குரோத்து நிலையில் இருந்து முழுமையாக விடுபடுவது தொடர்பாக எங்களுக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் இப்போது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். அந்தக் குழுவும் சீனாவும் எங்களின் முன்மொழிவுகளை



ஏற்கத் தயாராக உள்ளன. சர்வதேச நாணய நிதியம் ஏற்கனவே அதனை ஏற்றுக்கொண்டுள்ளது. அதன்பிறகு அந்த நாடுகளுடன் தனித்தனி ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

மேலும் தனியார் கடன் வழங்குபவர்கள் மற்றும் வங்கிகள், ஓய்வூதிய நிதியம் இவை அனைத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் உடன்பாட்டுக்கு வர வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் எங்களிடம் இருப்பதால் எங்களுக்கு தொடர்ந்து செல்ல முடியும். ஜுன் மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இந்த நாட்டிற்கு வந்ததன் பின்னர் அது குறித்து கலந்துரையாடுவோம். பின்னர் இந்த திட்டம் 2025 வரவு - செலவுத் திட்டத்துடன் நடைமுறைப்படுத்தப் படும். தேர்தல் நடத்தப்பட இருப்பதால் ஜனவரி அல்லது




ப்ப்வெரியில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளினால் ஏற்படும் பொருளாதார அபிவிருத்தி மூலம் மக்களின் வருமானத்தை அதிகரிக்க முடியும். இதற்காக பொறுமையாக உழைத்த ஓய்வு பெற்ற அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் முன்னாள் படைவீரர்கள் குழுவுக்கும் நல்ல எதிர்காலம் அமைய வாழ்த்துகின்றேன்." - என்றார்.







# உரிமைகளைப் பாதுகாக்கும் ICCPR சட்டம் சிறுபான்மையினருக்கு அச்சுறுத்தலாகும் அவலம்



புருஜோத்தமன் தங்கமயில்

"...ஒரு பிரதியை (கட்டுரையை) முழுமையாக வாசிப்பதன் மூலமே அதன் பொருள் விளங்கும். ஆனால் என்னுடைய பேஸ்புக் பதிவில் ஒரு சொல்லை மட்டும், பிரித்தெடுத்து அதற்கு பொலிஸார் தமது சுய வியாக்கியானம் வழங்கி நான் கூற வந்ததை முழுமையாக திரித்து, என்னைக் குற்றவாளி ஆக்கினார்கள். எனது பேஸ்புக் பதிவில், இலங்கையில் அரச அனுசரணையுடன் நிகழ்த்தப்படும் இனவாதப் பரப்புரைகளுக்கு எதிராக முஸ்லிம்கள் பேனாவையும் விசைப் பலகையையும் பயன்படுத்தி கருத்தியல் ரீதியான போராட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்றே கூறினேன்..." என்று சமூக செயற்பாட்டாளரான ரம்சி ரசீக் கூறுகிறார். குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டத்தின் (International Covenant On Civil and Political Rights (ICCPR act)) கீழ் கைது செய்யப்பட்டு, 5 மாதம் 2 வாரங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ரம்சி ரசீக், தன்னுடைய கைது நடவடிக்கை தொடர்பில் இந்தக் கட்டுரையாளரிடம் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெறுப்புப் பேச்சுக்களுக்கு எதிராகவும், கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் கொண்டு வரப்பட்டுள்ள குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டம் (ICCPR act) தொடர்ச்சியாக இலங்கையில், முறையற்ற ரீதியில் பொலிஸாரினால்



பயன்படுத்துவதான முறைப்பாடுகள் உண்டு. குறிப்பாக, இன – மத சிறுபான்மையினரை ஒடுக்குவதற்காக இந்தச் சட்டத்தினை பொலிஸார் தொடர்ந்தும் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதும் தொடரும் குற்றச்சாட்டாகும். இது தொடர்பில், உயர்நீதிமன்றம் கூட, பொலிஸாரைக் கடிந்து கொண்டிருக்கின்றது.

ICCPR act இன் கீழ் கைது செய்யப்பட்டு, அந்தக் கைது சட்டத்துக்கு முரணானது என்று மேல் நீதிமன்றம் வழங்கியதீர்ப்பினூடுவிடுதலையானவர் ரம்சி ரசீக். அவர், தன் மீதான கைது நடவடிக்கை அடிப் படை உரி மைகளை மீறுவதாக தெரிவித்து உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கிலும் வெற்றிபெற்றிருக்கிறார். அந்த அடிப் படை உரிமை மீறல் வழக் கின் தீர்ப்பில், 'பொலிஸார் திட்டமிட்ட ரீதியில் ரம்சி ரசீக்கை கைது செய் வதற்காக ICCPR act இனை தவறாக பயன்படுத்தியிருக்கிறார்கள். ஒரு பதிவை (பிரதியை) முழுமையாக வாசிக்காமல், ஒரு வார்த்தையை எடுத்து அர்த்தத்தை திரித்து, அவரை பொலிஸார் கைது செய்திருக்கின்றமை தெளிவாக தெரிகின்றது.' என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏப்ரல் 02, 2020 ஆண்டு, அனைத்து இனவாத – மதவாத நடவடிக்கைகளுக்கும் எதிராக முஸ்லிம்கள் சிந்தனை ரீதியிலான ஜிஹாத்தினை (போராட்டம் (Ideological War) ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டும் என்று தன்னுடைய பேஸ்புக் பக்கத்தில் ரம்சி ரசீக் எழுதினார். இதனைத் தொடர்ந்து அவருக்கு பேஸ்புக் ஊடாக உயிரச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. ஏப்ரல் 09, 2020இல் தனக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் அவர் பொலிஸிடம் முறைப்பாடு செய்தார். எனினும் இந்த அச்சுறுத்தல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்காமல், பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

ரசீக்கை கைது செய்து விசாரணை நடத்திய குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பொலிஸார், அவரை, நீதிவான் நீதிமன்றத்தில் பிணை அளிக்கும் அதிகாரமற்ற குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டத்தின் (ICCPR act) கீழ் நீதிமன்றில் முன்நிறுத்தினர். இதன்போது, பொலிஸார் நீதிமன்றத்தில் "எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் ஆரம்பத்தில் மக்களின் மனநிலையை மாற்றவே முயற்சிக்கின் றது. ரம்சி ரசீக்கிற்கும் அவ்வாறான சில சொற்களைப் பயன்படுத்தி இனங் களுக்கு இடையே குரோதம் ஏற்படும் விதத்திலான சமூக வலைத்தளப் பதிவு களை அனைவரும் பாரக்கும் படியாக பொது வெளியில் பதிவிட்டு வந்துள்ளார். இதற்கு முன்னர் 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி, 28ஆம் திகதி மற்றும் 2019 ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி போன்ற தினங்களிலும் அவர் அதுபோன்ற பதிவுகளை இட்டுள்ளார். அந்தக் கருத்துக்கள் பொது மக்களிடையே குழப்பத்தை தூண்டும் வகையில் அமைந்துள்ளமை தெளிவாகின்றது..." என்று தெரிவித்திருந்தனர். இதனையடுத்து, அவர் நீதிமன்றத்தினால் தடுப்புக் காவலில் (சிறையில்) வைக்கப்பட்டார். அதன் பின்னராக ரம்சி ரசீக், தனது கைதுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து ஐந்தரை மாதங்களுக்குப் பின்னர் பிணை

தொடர்ச்சி▼



# உரிமைகளைப் பாதுகாக்கும் ICCPR சட்டம் சிறுபான்மையினருக்கு அச்சுறுத்தலாகும் அவலம்

தொடர்ச்சி▲

பெற்று விடுதலையானார்.

"...குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டம் (ICCPR act) என்பது வெறுப்புப் பேச்சுக்கு எதிராகவும், கருத்துச் சுதந்திரம் மற்றும் மத உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் ஐக்கிய நாடுகளினால் உறுப்பு நாடுகளிடம் வலியுறுத்தும் சமவாயச் சட்டம். ஆனால், இலங்கையில், ICCPR act என்பது இன – மத சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிப்பதற்காக அரச இயந்திரத்தினால் பயன்படுத்தப்படுகின்றது. சமூக செயற்பாட்டாளர் ரம்சி ரசீக், சட்டத்தரணி ஹியாஜ் ஹிஸ்புல்லா உள்ளிட்டோர் போலியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு ICCPR act கீழ் கைது செய்யப்பட்டு, அவர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டிருக்கின்றன. ஆனால், பெரும்பான்மை மதத்தைச் சேர்ந்த மதத் தலைவர்கள் சிலர் இனவாதத்தைத் தூண்டி வன்முறைக்கு வழிவகுக்கும் வகையில் பொது வெளியில் வெறுப்புப் பேச்சுக்களைப் பேசினாலும், அவர்களுக்கு எதிராக ICCPR act சட்டம் பாவிக்கப்படுவதில்லை. குறிப்பாக, கலபொட ஞானசார தேரர், அம்பட்டியே சுமண தேரர் ஆகியோர் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக தொடர்ச்சியாக வெறுப்புப் பேச்சுக்களைப் பேசி வருகிறார்கள். ஆனாலும் அவர்களுக்கு எதிராக இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை..." என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கிறார். இவர், ரம்சி ரசீக்கின் கைதுக்கு எதிராக, அவர் சார்பில் மேல் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடியிருந்தார்.

"...கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில், முஸ்லிம்கள் வேண்டுமென்றே சிங்கள மக்கள் மத்தியில் கொரோனாவை பரப்புகிறார்கள் என்ற விஷமப் பிரச்சாரம் பிரதான மற்றும் சமூக ஊடகங்களில் அரச அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வந்தது. முக்கியமாக அப்போது நடைபெறவிருந்த தேர்தலை இலக்கு வைத்தே இவ்வாறான பொய் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலைமையை வளர விட்டால் அது நாட்டிலே மிகப்பெரும் இனமுறுகலை தோற்றுவிக்கும் என்று நான் கருதியதாலேயே முஸ்லிம்கள் உடனடியாக செயற்பட்டு பொய்ப் பிரச்சாரங்களுக்கு எதிராக ஜனநாயக ரீதியில் எதிர்வினை ஆற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தவே என்னுடைய பேஸ்புக் பக்கத்தில், சிந்தனை ரீதியிலான போராட்டத்துக்கு தயாராக வேண்டும் என்று எழுதினேன். அந்தப் பதிவு அப்போது


පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

M A SUMANTHIRAN
B.Sc. (Physics), LLM (Internet & Electronic Law)
President's Counsel
Member of Parliament

3/1, Daya Road
Colombo 06.
Fax: 0112503107
Phone: 0777314628

27th October 2023

The Inspector General of Police,
Police Head Quarters
Colombo 1.

Statements aimed at inciting violence and racial and religious hatred

I wish to bring to your notice several public statements made in the last few days by the Venerable Mangalaramaya Ampitiya Sumana Thera, which have been given very wide publicity in the media.

The Venerable Thera has repeatedly attacked our party's Member of Parliament from Batticaloa District, Hon. Shanakiyan R Rasamanickam and has also gone on to explicitly threaten all the Tamils living in the South of the country that he will cut them to pieces! This is blatantly an offence punishable under Section 3(1) and (2) of the ICCPR Act No. 56 of 2007. Why has the Police not taken immediate action against the said Venerable Thera.

Yours truly,

Spokesperson
Ilankai Tamil Arasu Kadchi (ITAK)

Copies to:
1. Hon Speaker, Parliament of Sri Lanka
2. The media

இருந்த இனவாத தேர்தல் பிரச்சாரங்களுக்கு பாதிப்பாக அமைந்ததால் நான் எழுதுவதை எவ்வாறேனும் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே அவர்கள் என்னை கைது செய்தனர்..." என்றும் ரம்சி ரசீக் தன்னுடைய கைது தொடர்பில் வெளிப்படுத்துகிறார்.

அத்தோடு, கைது மற்றும் அது தொடர்பிலான வழக்கில் இருந்து விடுதலை பெற்ற பின்னர் தன்னுடைய நாளாந்த வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ரம்சி ரசீக் தெரிவிக்கின்றார். "..நான் ஒரு சுதந்திர சமூக ஊடக செயற்பாட்டாளராகத் தொடர்ந்தும் சமாதானம், நல்லிணக்கம், சக வாழ்வுக்காக எழுதி வருகிறேன். ஆனால் தற்போது சுதந்திரமாக என்னுடைய கருத்துக்களை வெளியிடுவதற்கான அச்சம் உள்ளது. நான் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகிறேன். மீண்டும் ஏதாவது வழக்கு ஒன்றில் என்னை சிக்க வைத்து கைது செய்யப்படலாம் என்ற அச்சமுள்ளது. நான் கைது செய்யப்பட்டதால், பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் என்னைக் குறித்த பிழையான பிம்பம் கட்டமைக்கப்பட்டுள்ளது.."

தொடர்ச்சி▼

# உரிமைகளைப் பாதுகாக்கும் ICCPR சட்டம் சிறுபான்மையினருக்கு அச்சுறுத்தலாகும் அவலம்

தொடர்ச்சி▲

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

**இலங்கையில் ICCPR actஇன் அறிமுகம்**

இலங்கையில் 2007ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டம் (International Covenant On Civil and Political Rights (ICCPR) ACT, No. 56 0F 2007), 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.


My No.
Your No.
Date.
2019.08.29
Human Rights Commission of Sri Lanka

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம் (International Covenant On Civil and Political Rights (ICCPR)) ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் 1966ஆம் ஆண்டு தீர்மானம் மூலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்தை ஏற்றுக் கொண்ட நாடுகள், அதனை எவ்வாறு நடைமுறைப் படுத்துகின்றன என்பதைக் கண்காணிப்பதற்காக, சமவாயத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு தோற்றுவிக்கப்பட்டது. இந்தக் குழுவிடம், சமவாயத்தின் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த தனி நபர்கள், தமக்கு ஏற்படும் உரிமை மீறல்கள் தொடர்பிலான முறைப்பாடுகளைச் செய்து, நீதியைக் கோருவதற்கான ஏற்பாடு சமவாயத்தின் முதலாம் விருப்ப நெறிமுறை (First Optional Protocol to the ICCPR) செய்யப்பட்டது. 1976ஆம் ஆண்டு மார்ச் மாதம் சமவாயத்தின் அங்கத்துவ நாடுகள், அதனை நடைமுறைக்கு கொண்டு வந்தன.

இலங்கை, 1980 ஆண்டு ஜூன் மாதம் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்தில் உறுப்பினராகியது. ஆனாலும், 1997ஆம் ஆண்டுதான் இலங்கை முதலாம் விருப்ப நெறிமுறையில் இணைந்து கொண்டது. அப்போது, இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர், "இலங்கையில் மனித உரிமைகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அது தொடர்பிலான சர்வதேசத்தின் அவதானிப்புக் குறித்து எந்தவித அச்சமும் இல்லை." என்று கூறியிருந்தார். அதனைத் தொடர்ந்து சமவாயத்திடம் இலங்கைச் சேர்ந்த பலர் முறைப்பாடுகளைச் செய்தார்கள். அதில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த நல்லரட்ணம் சிங்கராசா, 2001ஆம் ஆண்டு முறைப்பாடு செய்திருந்தார். அவருடைய தனிநபர் முறைப்பாட்டினைக் கேட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு, அவருக்கு சார்பாக 2005ஆம் ஆண்டு தீர்மானம் எடுத்திருந்தது. அதில், சிங்கராசாவின் நியாயமான விசாரணைக்கான உரிமை (சமவாயத்தின் உறுப்புரை 14) மீறப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டியிருந்தது. இதனையடுத்து, அவர் தனக்கு விதிக்கப்பட்டிருக்கும் தண்டனைக்கு எதிராக மீளாய்வு மனுவை இலங்கை உயர்நீதிமன்றத்தில் 2006ஆம் ஆண்டு முன்வைத்தார்.

இந்த மனு தொடர்பிலான தீர்ப்பின் போது, பிரதம நீதியரசரான சரத் என் சில்வா, "...இலங்கையின் நீதி நடைமுறையில் உயர்நீதிமன்றமே அதியுச்சபீடம். அதன் தீர்ப்புகள் தொடர்பாக பிறிதொரு தரப்பிற்கு தீர்மானங்களை அறிவிக்கும் அதிகாரம் இல்லை. சமவாயத்தின் முதலாம் விருப்ப நெறிமுறையை ஏற்றுக்கொண்டு அப்போதைய இலங்கை ஜனாதிபதி (சந்திரிக்கா குமாரதுங்க) இணைந்து கொண்டு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவிடம் நீதி வழங்கும் அதிகாரத்தை வழங்கியமை இலங்கையின் அரசமைப்புக்கு முரணானது." என்று தீர்ப்பளித்தார்.

சிங்கராசா வழக்கின் தீர்ப்பு, சர்வதேச ரீதியில் தொடர் விமர்சனங்களுக்கு உள்ளானது. இதனையடுத்துதான், 2007ஆம் ஆண்டு 56ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டம் (International Covenant On Civil and Political Rights (ICCPR) ACT, No. 56 0F 2007) நாடாளுமன்றத்தில் நிறைவேற் றப்பட்டு, நடைமுறைக்கு வந்தது.

**ICCPR act கீழ் கைது செய்யப்பட்ட சிலர் -**

1. அஃனாப் ஜஜீம், மன்னார் சிலாவத்துறைச் சேர்ந்த கவிஞர். 'நவரசம்' எனும் கவிதை புத்தகத்தில் சிறுவர்கள் மத்தியில் அடிப்படைவாதத்தையும் வன்முறையையும் தூண்டுகிறார் எனும் குற்றச்சாட்டின் கீழ், 2020ஆம் ஆண்டு மே மாதத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் ICCPR act கீழ் கைது செய்யப்பட்டார். 18 மாதங்களுக்குப் பின்னர் 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பிணை வழங்கப்பட்டது. அவர் குற்றமற்றவர் என்ற தீர்ப்பை 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் புத்தளம் மேல் நீதிமன்றம் வழங்கியது.

2. அசாத் சாலி, மேல் மாகாண முன்னாள் ஆளுநர். முஸ்லிம்கள் இஸ்லாமிய சட்டங்களை மாத்திரமே மதிக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார் என்ற குற்றச்சாட்டில், 2021ஆம் ஆண்டு மே மாதம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் ICCPR act கீழ் கைது செய்யப்பட்டார். எனினும் அவரை 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் குற்றமற்றவர் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது.

3. மஜஹீமா, முஸ்லிம் பெண். கப்பல் சுக்கான் (ship steering wheel) பொறிக்கப்பட்ட ஆடையை அணிந்திருந்த நிலையில், குறித்த பெண் புத்த தர்மச்சக்கரத்தை அவமதிப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டு ICCPR act கீழ் 2019ஆம் ஆண்டு மே மாதம் கைது செய்யப்பட்டிருந்தார். அதே ஆண்டு ஜூன் மாதம் பிணையில் விடுதலையானார்.

4. ஹிஜாய் ஹிஸ்புல்லா, சட்டத்தரணி. புத்தளத்திலுள்ள முஸ்லிம் மதரசா ஒன்றில் வெறுப்புப் பேச்சினை சிறுவர்களுக்கு மத்தியில் நிகழ்த்தினார் என்ற குற்றச்சாட்டில் 2020ஆம் ஆண்டு ஏப்ரலில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் ICCPR act இன் கீழ் கைது செய்யப்பட்டார். அவர், 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் புத்தளம் மேல் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். 21 மாதங்களுக்கு மேலான தடுப்புக் காவலில் இருந்து விடுதலையானார். அவரது வழக்கு இன்னமும் நீதிமன்ற விசாரணைகளில் இருக்கின்றது.

5. சத்திக்க சத்குமார, எழுத்தாளர். அவர் எழுதிய சிறுகதையொன்றில் பௌத்த பிக்குகளை நிந்திப்பதாக தெரிவித்து, 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தண்ட

தொடர்ச்சி▼

# உரிமைகளைப் பாதுகாக்கும் ICCPR சட்டம் சிறுபான்மையினருக்கு அச்சுறுத்தலாகும் அவலம்

**தொடர்ச்சி▲**

னைச் சட்டக்கோவை மற்றும் ICCPR act இன் கீழ் கைது செய்யப்பட்டார். நான்கு மாதங்களின் பின்னர், அவர் பிணையில் விடுதலையானார். பின்னரான காலத்தில், அவர் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பது தொடர்பிலான வழக்கினை தொடர்ந்தும் முன்னெடுக்க சட்டமா அதிபர் திணைக்களம் விரும்பாத நிலையில், சத்திக்க சத்குமாரவை நீதிமன்றம் 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அவரை விடுதலை செய்தது. அவர் தன்னுடைய கைது நடவடிக்கைக்கு எதிரான அடிப்படை மனித உரிமை வழக்கும் தொடர்ந்திருக்கிறார்.

6. நடாஷா எதிரிசூரியா, நகைச்சுவைப் பேச்சாளர். "சுத்தோதனவின் மகன் இருக்கிறாரே.." என்ற சொல்லாடலை தன்னுடய நகைச்சுவை மேடைப் பேச்சின் போது குறிப்பிட்டதற்காக புத்தரை அவமதிப்பதாக தெரிவித்து, 2023ஆம் ஆண்டு மே மாதம், ICCPR act இன் கீழ் கைது செய்யப்பட்டார். அவருக்கு, மூன்று மாதங்களின் பின்னர் பிணை வழங்கப்பட்டது. வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி, இலங்கையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் இடம்பெற்று நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல்களை இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கமொன்று தாம் நடத்தியதாக உரிமை கோரியது. எனினும் இந்தத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் கூறப்படுகின்றன. இந்த நிலையில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்குப் பின்னர், இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத – மதவாத வெறுப்புப் பிரச்சாரம், சில தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டது. இதனை, உள்ளூர் மனித உரிமை ஆர்வலர்கள், அமைப்புக்கள் தொடங்கி ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமைப்புக்கள் வரையில் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றன. அத்தோடு, கண்டித்தும் இருக்கின்றன. இந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்குப் பின்னர், முஸ்லிம் மத சிறுபான்மையினர், ICCPR act கீழ் கைது செய்யப்படும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமையை அவதானிக்க முடியும். இது, நாட்டில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருந்த முஸ்லிம் வெறுப்புப் பிரச்சாரத்தின் பின்னணியில் நிகழ்ந்தான அச்சம் நிலவுகிறது. ICCPR act கீழ் கைதாகி விடுதலையான ரம்ஸி ரசீக், ஹியாஜ் ஹிஸ்புல்லா ஆகியோர் அந்த விடயத்தை வெளிப்படையாக முன் வைக்கவும் செய்கிறார்கள்.


மத வெறுப்புப் பிரச்சாரத்துக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ICCPR actஇனை பொலிஸார், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை அடக்குதவதற்காக பாவிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு, தொடர்ந்தும் முன்வைக்கப்படும் நிலையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு ஓகஸ்ட் 29, 2019ஆம் ஆண்டில் கடிதமொன்றை எழுதியது. அதில், "ICCPR சட்டத்தின் பிரிவு 3இன் நியாயமானதும் பற்றுறுதி வாய்ந்ததுமான வினைப்படுத்தலுக்கு பொலிஸ் திணைக்களத்தினால் இந்த வழிகாட்டுல்கள் கரிசனை கொள்ளப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.." என்று சுட்டிக்காட்டியது.

"...ICCPR act மத வெறுப்பு மற்றும் போர் உள்ளிட்ட ஆயுத வன்முறைகளுக்கான பிரச்சாரத்தைத் தடுப்பதற்காக கொண்டுவரப்பட்டது. ஆனால், அந்தச் சட்டத்தின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல், சிறுபான்மையினரின் கருத்துச் சுதந்திரத்தைத் தடுப்பதற்கான கருவியாக,இலங்கையில் ICCPR act கையாளப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸாருக்கு இலங்கையின் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் தொடங்கி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, உள்ளூர் மனித உரிமைகள் அமைப்புக்கள், சர்வதேச அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்புக்கள் வரையில் சுட்டிக்காட்டியிருக்கின்றன. ஆனால், சிறுபான்மையினருக்கு எதிராக ICCPR act திட்டமிட்ட ரீதியில் பயன்படுத்தப்படுவது இன்னும் குறையவில்லை..." என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான அம்பிகா சற்குணாநந்தன் தெரிவிக்கின்றார்.

அம்பேபிட்டிய சுமண தேரர், தமிழ் – முஸ்லிம் மக்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சுக்களை அடிக்கடி பேசியிருக்கிறார். ஆனால், அவருக்கு எதிரான ICCPR act சட்டத்தின் கீழ் இதுவரை எந்த வழக்குகளையும் பொலிஸார் பதிவு செய்திருக்கவில்லை. கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில், சுமண தேரர் ஊடகங்கள் முன்னிலையில், தென் இலங்கையிலுள்ள தமிழ் மக்களை கொலை செய்யப்போவதாக மிரட்டும் வெறுப்புப் பேச்சை பேசினார். ஆனால், அது தொடர்பில் அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சுமண தேரரின் வெறுப்புப் பேச்சை சுட்டிக்காட்டியும் ICCPR act இன் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரியும் பொலிஸ் மா அதிபருக்கு, ஒக்டோர் 27, 2023 அன்று கடிதம் எழுதினார். ஆனால், பொலிஸார் சுமண தேரருக்கு எதிராக நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுக்கவில்லை. இதனையடுத்து, சில நாள்களின் பின்னர் (நவம்பர் மத ஆரம்பத்தில்) தன்னுடைய வெறுப்புப் பேச்சுக்காக சுமண தேரர் பொதுவெளியில் மன்னிப்புக் கோரினார்.

இதுபோன்ற, பொதுபல சேனா அமைப்பின் கலபொட அத்தே ஞானாசார தேரர், தமிழ் – முஸ்லிம் சிறுபான்மை மக்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சினை தொடர்ச்சியாக பேசி வந்திருக்கிறார். ஜூன் மாதம், 2014ஆம் ஆண்டு அளுத்கம நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஞானசார தேரர், எண்ணிக்கை அடிப்படையில் சிறுபான்மையினரான முஸ்லிம்கள் மீது கொலை அச்சுறுத்தல் விடுத்து உரையாற்றினார். ஆனாபோதும் அவருக்கு எதிராக பொலிஸார் வன்முறையைத் தூண்டுதல் மற்றும் வெறுப்புப் பேச்சுக்கு எதிரான ICCPR actஇன் கீழ் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதன் பின்னராக காலப்பகுதியில் அளுத்கமவில் கலவரம் மூண்டது சுட்டிக்காட்டத்தக்கது.

கூர்ப்படைந்து வருகின்ற மனித நாகரீகத்தில், சட்ட வரையறைகளும் நீதித்துறையும் அது சார்ந்த நிறுவனங்களும் மக்களை நெறிப்படுத்தி குற்றங்கள், வன்முறைகளற்ற சமாதானம் சகவாழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்கின்றன. குறிப்பாக, ஒவ்வொரு மனிதனது அடிப்படை உரிமைகளையும் மதிக்கவும் பாதுகாக்கவுமே மனித உரிமைகள் சார் சட்டங்கள் சர்வதேச ரீதியில் முன்வைக்கப்பட்டு, ஒவ்வொரு நாட்டினதும் உள்ளூர் ஒழுங்குக்கு அமைய நிறைவேற்றப்பட்டுகின்றன. ஆனால், அந்தச் சட்டங்களின் உண்மையான நோக்கங்கள் புரிந்து கொள்ளப்படாமல், மக்களின் உரிமைகளை மீறுவதற்காக கையாளப்படுவது என்பது, ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது அல்ல. இலங்கையில், சிறுபான்மையினருக்கு எதிராக குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டம் (ICCPR act) தொடர்ச்சியாக கையாளப்படுவது என்பது வெளிப்படையானது. அது தொடர்பில் இந்தக் கட்டுரையில் பல இடங்களில் உதாரணங்களோடு சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. ICCPR actஇன் உண்மையான நோக்கத்தைப் புரிந்து கொண்டு, அதனைப் பொலிஸார் உள்ளிட்ட இலங்கையில் அரச கட்டமைப்பின் பிரிவுகள் கையாள வேண்டும். மாறாக, ஏதோவொரு பிரிவினரை அடக்குவதற்காகவோ, அவர்களின் கருத்து உள்ளிட்ட வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை பறிப்பதற்காகவோ கையாளக்கூடாது.







# மட்டக்களப்பு வடமுனை நெலுகல்மலையில் புதிய விகாரை கட்டுமாணப்பணி மிக மும்முரம்

## இரு இராஜாங்க அமைச்சர்களும் அதற்கு உடந்தையாம் மக்கள் முன்னணியின் தர்மலிங்கம் சுரேஸ் குற்றச்சாட்டு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பை சிங்கள மயமாக்கும் திட்டத்தின் அடிப்படையில் எல்லைக் கிராமமான கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வடமுனை கிராம சேவகர் பிரில், நெலுகல் மலையில், மாவட்டத்தின் இரு இராஜாங்க அமைச்சர்களின் ஆசீர்வாதத்துடன் நெலுகல்மலை கிறீன் விகாரை எனும் பெயரில் புதிதாக விகாரை கட்டும் பணி திருகோணமலை சோமவதி விகாரை விகாராதிபதி தலைமையில் இடம்பெற்று வருகின்றது என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.




மட்டக்களப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி காரியாலத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாள் மாநட்டில் அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

திட்டமிட்ட அடிப்படையிலே கிழக்கு சிங்கள தேசத்துக்குள் படிப் படியாகக் கரைந்து கொண்டிருக்கின்றது. அம்பாறை, திருகோணமலை மாவட்டம் முழுவதுமாக சிங்களதேசத்தின் திட்டமிட்ட அபகரிப்பு உட்பட்டு, தமிழ் மக்கள் கையில் இருந்து விடுவிக்கப்படுகின்ற மிகப் பெரிய ஆபத்தான நிலைக்குப் போயிருக்கின்றது

அதன் அடுத்த கட்டமாக மட்டக்களப்பு மாவட்டம். இதில் எல்லைப்புற கிராமங்கள் சிங்கள தேசத்தினாலும் பொரும்பான்மை இனத்தவர்களால் குறிவைக்கப்பட்டு எல்லைக்கிராமங்கள் அபகரிக்கும் செயற்பாடுகள் படிபடியாக நடந்தேறி வருகின்றன.

அதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள வடமுனை கிராம சேவகர் பிரிவிலுள்ள நெலுகல் மலையில் எனப்படுகின்ற – குடும்பிமலையின் பின்பகுதியான இந்த மலையில் – நெலுகல்மலை கிறீன் விகாரை எனும் பெயரில் விகாரை கட்டும் பணி திருகோணமலை சோமவதி விகாரை விகாராதிபதி தலைமையில் இடம்பெற்று வருகின்றது.

இந்த பகுதியில் பாரிய கட்டடம் அமைக்கப்பட்டு, அதில் இருந்து கொண்டு கட்டுமானப்பணியில் மேசன்களாக இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனை கிழக்கு மாகாணத்தை முற்றும் முழுதாக சிங்கள – பௌத்த தேசத்துக்குள் கரைப்பதற்கான நடவடிக்கையாகப் பார்க்கின்றோம். வடக்கில் குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, கையகப்படுத்தப்பட்டுள்ள இந்த வேளையிலே கிழக்கு மண் சத்தம் இல்லாமல் பறிபோய் கொண்டிருக்கின்றது.

மயிலத்தமடு மேய்ச்சல் தரையில் ரவுண்டப் எனும் புல்லுக்கு அடிக்கும் மருந்தையடித்து மேய்ச்சல் புல்தரைகள் அழிக்கப்பட்டு, 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட மேய்ச்சல் தரை காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை மகாவலி ஏ வலயத்துக்குரிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பொரும்பான்மை இனத்தவர்களைஜ் குடியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை பண்ணையாளர்களை தொடர்ந்து அச்சுறுத்தி அங்கிருந்து அவர்களை வெளியேற்றுகின்ற நடவடிக்கைகள் கச்சிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகளுக்கு யார் காரணம் என்பதை மக்கள் மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த மாவட்டத்தில் இரு இராஜாங்க அமைச்சர்கள் இருக்கின்றனர். இவர்களுடைய பணி சிங்கள தேசத்தினுடைய நிகழ்சி நிரலை அமுல்படுத்துவதுதான். அதுவே இவர்களது நோக்கமாக இருக்கின்றதே தவிர, மட்டக்களப்பு மாவட்ட மக்களைப் பாதுகாக்க எந்தவொரு முன்னேற்றகரவமான செயற்பாடுகளையும் அவர்கள் செய்யவில்லை.

குறிப்பாக மேய்ச்சல் தரைப்பகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் போக முடியாத சூழ்நிலை காணப்பட்டது. அதனை எமது கட்சி தலைவர் நாடாளு

தொடர்ச்சி▼







**தொடர்ச்சி▼**

மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அந்த இடத்துக்கு சென்று அந்த பகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கூட செல்லமுடியாத இலை உள்ளது என்பதை சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்தியிருந்தார்.


இந்த நிலையில் கஜேந்திரகுமார் ஏன் இங்கு வரவேண்டும் எனப் பிள்ளையான் நேற்றைய கூட்டத்தில் தெரிவித்திருந்தார். எனவே கஜேந்திரகுமார் இந்த இடத்துக்கு வரவேண்டியதாக இருந்தது நீங்கள் ஒரு காட்டிக் கொடுப்பை செய்து தமிழ் மக்களை அழிக்கின்ற செயற்பாட்டில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதனால்தான். அந்த மக்கள் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளை கூப்பிடவேண்டிய அபாய நிலைக்கு நீங்கள்தான் இட்டுச் சென்றீர்கள். எனவே அது ஒரு வெட்கக்கேடான விடயம்.

இவரின் செயற்பாடுகளை பார்த்தால் தெரியும். தங்களது பொக்கற்றுக்களை நிரப்புகின்ற விதமாக தங்களின் அமைச்சுக்கு ஊடாக கிடைக்கின்ற வீதிகளை அமைத்து, அதில் 15 வீதம் தரகு பணம் பெற்றுக் கொண்டு, அதற்கு வக்காளத்து வாங்குகின்ற ஒப்பந்தகாரர்களை பின்னால் வைத்துக்கொண்டு, தான் பேச ஒப்பந்தகாரர்கள் கையடிக்கின்ற செயற்பாட்டை மிகக் கச்சிதமாக பிள்ளையான் செய்து வருகின்றார்.

எனவே மட்டக்களப்பு மக்கள் புத்தி சாதுரியமாகச் சிந்திக்கவேண்டிய காலம் இது. வரப்போகும் தேர்தல் மாவட்டத்தை மேலும் ஓர் அரசியல் அடிமை நெருக்கடிக்குள் தள்ளப் போகின்றது. எனவே வருகின்ற தேர்தலில் தமிழ் தேசியத்துடன் உள்ள தமிழ் தரப்புக்களைப் பலப்படுத்தவேண்டுமே தவிர, மாறாக அரசுடன் நிற்கின்றவர்களுக்கு வாக்கை அளிப்பீர்களாக இருந்தால் மட்டக்களப்பில் மிஞ்சி இருக்கின்ற கொஞ்சக் காணிகளும் பறிபோய் மக்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாக அமைந்து விடும்.

இந்த விகாரை கட்டும் விடயம் இரண்டு இராஜாங்க அமைச்சர்களுக்கும் தெரியாமல் நடக்க வாய்ப்பு இல்லை. இவர்களின் நிகழ்சி நிரல் அடிப்படையில் இவர்களுக்கு தெரிந்துதான் நடக்கின்றது. இதனைத் தெரியப்படுத்தினால் தங்களுக்க மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்ற பயத்தினால் தெரியப்படுத்தாமல் அரசின் நிகழ்சி நிரலை இவர்கள் செய்கின்றனர்.

அதற்காக போடுகின்ற பிச்சைகளான எலும்பு துண்டுகளுக்குத்தான் இவர்கள் அலைகின்றனரே தவிர, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு முகம் கொண்டு, கிழக்கை மீட்கின்றோம் எனப் போலித்தனமான கதைகளை மக்களுக்குச் சொல்லி, இனப்படுகொலை செய்தவர் – படுகொலை செய்தவர் – மக்கள் மத்தியில் பூமாலைகள் தரித்துக் கொண்டு திரிகின்றார். இது எங்களுடைய படித்த சமூகத்திற்கும், உண்மையான தமிழ் உணர்வுள்ள மக்களுக்கு தெரிந்திருக்கும். அதற்கான பதிலடியயை எதிகாலத்தில் மக்கள் கொடுப்பார்கள். – என்றார்.



### ஐ.எஸ்.ஐ.எஸ். உடன் தொடர்பு:

# இந்தியாவில் கைதான நால்வர் குறித்த விசாரணைக்கு விசேட குழு நியமனம்

### கைதான ஒருவர் பொட்ட நௌஃபரின் மகனாம்



இந்தியாவின் அஹமதாபாத் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட – ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் – இலங்கையர்கள் நால்வர் தொடர்பான விசாரணைகளுக்காக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோரின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தென் பகுதியில் இருந்து வரும் அனைத்து பயணிகளின் தகவல்களையும் அடையாளம் காணும் நடவடிக்கையின் கீழ், அஹமதாபாத் விமான நிலையத்தில் குஜராத் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் சென்னையில் இருந்து வருகை தந்த நான்கு பயணிகள் கடந்த திங்கள் கிழமை கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சந்தேகநபர்கள் நீர்கொழும்பு பெரியமுல்ல பகுதியை சேர்ந்த 33 வயதான மொஹமட் நுஸ்ரத், கொழும்பு மாளிகாவத்தையை சேர்ந்த 35 வயதான மொஹமட் ஃபாரிஸ், கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியை சேர்ந்த 27 வயதான மொஹமட் நஃப்ரான், கொழும்பு 13 ஐ சேர்ந்த 43 வயதான மொஹமட் ரஷ்டீன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி நால்வருக்கும் பாகிஸ்தானை சேர்ந்த அபு என்ற நபருடன் சமூக வலைத்தளங்கள் மூலம் தொடர்பில் இருப்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்தியாவில் தாக்குதல் நடத்த அபு என்ற நபரால் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளனர் என அந்த நாட்டின் பாதுகாப்புத் தரப்பினரை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சந்தேகநபர்கள் நால்வரும் தற்கொலைத் தாக்குதலுக்கு தயாராக இருந்தனர் எனவும், அதற்காக அபு என்ற நபர் தலா 4 லட்சம் இலங்கை ரூபாவை வழங்கியுள்ளார் என்றும் அந்த ஊடகச் செய்தியில் குறிப்பிடப்பட் டுள்ளது.

அபு என்ற நபர் நான்கு இலங்கையர்களுக்கும் வழங்க தயார் செய்த சில ஆயுதங்களும் விசாரணையின் போது கண்டுபிடிக்கப்பட்டன.

இவர்களில், மொஹமட் நஃப்ரான், நீதிபதி சரத் அம்பேபிட்டியவை கொலை செய்த குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட, திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளியான நியாஸ் நௌஃபர் எனும் பொட்ட நௌஃபரின் மகன்என அடையாளம்காணப்பட்டுள்ளார்.



# மே 27 முதல் புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஒன்லைன் முறையில் விண்ணப்பிக்கலாம்

2024 ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஒன் லைன் முறையூடாக விண்ணப்பங்களை கோரும் நடவடிக்கை எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கிணங்க, எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் ஜூன் 14 ஆம் திகதி நள் ளிரவு 12 மணி முதல் விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களை ஏற்கும் திகதி நீடிக்கப்பட மாட்டாதெனவும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் செப்டம்பர் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.




# மத்திய மலைநாட்டில் மழையால் இயல்பு வாழ்க்கை பெரும் பாதிப்பு

(செ.தி.பெருமாள்)

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த மூன்று நாள்களாகப் பெய்யும் மழை காரணமாக நீர் தேக்கப் பகுதிகளில் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து வருகின்றது.

இன்று காலை வரையில் மவுஸ் சாக்கலை நீர் தேக்கத்தில் 6 அடி நீர் உயர்ந்து உள்ளது.

அதேபோல் காசல்ரீ நீர் தேக்கத்தின் நீர் மட்டம் 10 அடி உயர்ந்துள்ளது.

மேல் கொத்மலை நீர் தேக்கத்தின் நீர் மட்டமும் வெகுவாக உயர்ந்துள்ளது.

கென்யோன்,லக்சபான, நவலக்சபான,பொல்பிட்டிய, கலுகல, விமலசுரேந்திர ஆகிய நீர் தேக்க பகுதிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மத்திய மலைநாட்டில் உள்ள அனைத்து ஓடைகள், ஆறுகள், அருவிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் இப் பகுதியில் கடுமையான காற்று வீசுவதால் ஆங்காங்கே மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

இதனால் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு முதல் மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டுள்ளது. கடுமையான குளிரும் நிலவி வருகிறது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை மிகவும் குறைந்த நிலையில் இருந்தது.

நோட்டன் - மஸ்கெலியா பிரதான வீதியில் மண் திட்டுகள் சரிந்து விழுந்தது உள்ளமையால் அப்பகுதியில் பயணிக்கும் போது மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஆலயக் குருக்களின் சங்கிலி அறுத்தவரும் சங்கிலியை உருக்க உதவியவரும் கைது!

(த.சுபேசன்)

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் கடந்த வாரம் ஆலய குருக்களின் வீட்டிற்குச் சென்று குருக்களுடைய சங்கிலியை அறுத்த சந்தேகநபர் ஒருவரும், திருட்டுப் பொருளை உருமாற்ற உதவிய நபர் ஒருவரும் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கெருடாவில் பகுதியில் உள்ள குருக்கள் ஒருவரின் வீட்டிற்குச் சென்ற இருவர் சாதகம் எழுத வேண்டும் என பாசாங்கு செய்து குருக்களை நெருங்கி அவர் அணிந்திருந்த இரண்டு பவுண் சங்கிலியை அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பித்திருந்தனர்.

இந்நிலையில் இது தொடர்பாக குருக்களால் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டினை அடிப்படையாக



கொண்டு சி.சி.ரி.வி. கமராவின் உதவியோடு திருட்டுக்குப் பயன்படுத்திய பல்சர் ரக மோட்டார்சைக்கிளை கைப்பற்றியமையுடன் சந்தேக நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய் திருந்தனர்.

அதன் பின்னர் திருடப்பட்ட சங்கிலி உருக்கப்பட்ட நிலையில் அதனையும் மீட்டுஉருக்குவதற்கு உதவிய நபரையும் கைது செய்துள்ளனர்.

மேற்படி திருட்டுடன் தொடர்புடைய மற்றைய சந்தேக நபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைத் தாங்கள் முன்னெடுத்திருக்கின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# கதிர்காமத்தில் ஆடிவேல் விழாவிற்கான கன்னிக்கால் நடும் சடங்கு நாளை காலை

## ஜூலை 6 இல் கொடியேற்றம் 22இல் தீர்த்தம்

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்தின் மாங்கல்ய சடங்கு கன்னிக்கால் அல்லது முகூர்த்த கால் அல்லது பந்தல்கால் நடும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை நடைபெறவிருக்கிறது.



கதிர்காம கந்தன் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறவிருக்கிறது.

முகூர்த்தத்தில் நாளை அதிகாலை, பழங்கால முறைப்படி வெட்டப்பட்ட கம்புகள், மாணிக்க ஆற்றில் குளிப்பாட்டப்பட்டு, இன்று இரவு வள்ளி அம்பாள் திருக்கோவில் வைக்கப்பட்டு நாளை காலை சுப முகூர்த்தத்தில் வள்ளி அம்மன் ஆலயத்திலிருந்து குழுவினர் கந்தன் ஆலயத்திற்கு எடுத்துச் செல்வார்கள். கதிர்காமம் பெரிய ஆலயத்தில் இக் கன்னிக்கால் அதிகாலையில் நிலமே முன்னிலையில் பக்தி பூர்வமாக பாரம் பரிய கலாசார மரபு முறைப்படி நடப் படும்.

அதன்படி, நாளை முதல் 45 நாள்களுக்குப் பின்னர் அதாவது 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த அசல பெரஹெரா ஆடிவேல் திருவிழா ஜூலை 06ஆம் திகதி ஆரம்பமாகி, ஜூலை 21ஆம் திகதி பேரூர்வலம் (மஹா பெரஹெரா) இடம்பெற்று, ஜூலை 22ஆம் திகதி காலை மாணிக்க கங்கையில் நீர் வெட்டும் சடங்குடன் அதாவது தீர்த்தத்துடன் நிறைவடையும்.

இந்த உத்தியோகபூர்வ அறிவித்தல் ஆலய தலைமையகத்தினால் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.















# பொத்துஹெர - பொல்கஹவெல இடையே ரயில் ஒன்று தடம்புரள்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நேற்றுக் காலை குருநாகல் ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு பயணித்த கெலகுமரி ரயில் பொத்துஹெர மற்றும் பொல்கஹவெல ரயில் நிலையங்களுக்கு இடையில் தடம் புரண்டுள்ளது.

குருநாகலிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த அலுவலக உத்தியோஸ்தர்கள் பயணித்த ரயிலே இவ்வாறு தடம் புரண்டது.

இதனால் இதில் பயணித்த அலுவலக உத்தியோஸ்தர்களும் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நெருக்கடியை எதிர் கொண்டனர்.

இதனால், வடக்கு ரயில் மார்க்கத்தில் போக்குவரத்து நேற்றுப் பகல் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.







# 20 கோடி ரூபா கொக்கேய்னுடன் பிலிப்பைன்ஸ் நாட்டு பெண் கைது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொக்கேய்ன் போதைப்பொருள் தொகையுடன் பிலிப்பைன்ஸ் பெண் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட போது, அவரிடம் இருந்து 2 கிலோ 851 கிராம் கொக்கெய்ன் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த கொக்கெய்ன் தொகையின் பெறுமதி 200 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் என சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த பெண் எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவிலிருந்து தோஹா – கட்டார் ஊடாக இலங்கைக்கு வந்துள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் தனது சூட்கேஸில் மிளகாய் தூள், மஞ்சள் தூள் மற்றும் கோதுமை மா அடங்கிய 03 பொதிகளுடன் கொக்கைன் போதைப்பொருள் அடங்கிய 03 பொதிகளையும் மறைத்து வைத்திருந்தார்.

அவர் பிலிப்பைன்ஸில் வசிக்கும் 47 வயது உதவி கணக்காளர் என்பது தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான பெண்ணின் நண்பியின் ஊடாக போதைப்பொருள் கடத்தல்காரர்களால் குறித்த போதைப்பொருள் இலங்கைக்குள் அனுப்பப் பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேலும், போதைப்பொருள் கடத்தல்காரர்களால், குறித்த பெண் 5 நாள்களுக்கு இலங்கையில் உள்ள சுற்றுலா ஹோட்டல்களில் தங்குவதற்கு தேவையான வசதிகளை செய்து தருவதற்கு தேவையான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக மேலும் தகவல் வெளியாகியுள்ளது.

# எல்ல – வெல்லவாய பிரதான வீதியில் பயணங்களைத் தவிர்க்க வழிகாட்டல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாட்டின் பல பகுதிகளிலும் பெய்து கொண்டிருக்கும் பலத்த மழை காரணமாக எல்ல – வெல்லவாய பிரதான வீதியில் பயணிப்பவர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும், கூடிய வரையில் மலைநாட்டுப் பகுதிகளுக்கான பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறும் அனர்த்த மத்திய நிலையமும் பொலிஸாரும் பொது மக்களை கேட்டுள்ளனர்.

மண் சரிவு திடீரென ஏற்படுகின்றது. தொடர்ச்சியான இடைவிடாத மழை காரணமாக நீர் வீழ்ச்சியிலிருந்து நீர் பீறிட்டு பாய்வதால் ஆறுகளின் நீர் மட்டமும் படிப்பாக உயர்ந்து காணப்படுகின்றது.

அடுத்த தினங்களில் வெசாக் விடுமுறையாக இருப்பதால் அதிகமானவர்கள் பயணங்கள் செல்ல திட்டமிட்டிருந்தால் அவற்றை தவிர்த்து வீட்டிலிருந்து அனர்த்தங்களில்லா விடுமுறையை அனுபவிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.






# திருக்கேதீஸ்வரத்தில் தீர்த்த உற்சவம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தீர்த்த உற்சவம் நேற்றுப் புதன்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக திருவிழா இடம் பெற்று வந்தது.

நேற்று உற்சவ மூர்த்திகளுக்கு வசந்த மண்டபத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றமையைத் தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் உள் வீதி, வெளி வீதி உலா வந்தனர்.

அதனை அடுத்து காலை 10 மணிக்கு உற்சவ மூர்த்திகள் பாலாவி தீர்த்தக்கரைக்கு சென்றமையைத் தொடர்ந்து தீர்த்த உற்சவம் இடம் பெற்றது. ஆயிரக்கணக்கான பக்த அடியார்கள் தீர்த்த உற்சவத்தில் கலந்து கொண்டனர்.

அதன் பின்னர் நேற்றிரவு கொடி இறக்கம் இடம்பெற்றது.









# இன்றைய ராசி பலன்கள் - 23.05.2024




இன்று சற்று மந்தமான நாள். இன்று சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நெருங்கிய நண்பர்களுடன் கருத்து வேறு பாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது ஆறுதலை அளிக்கும்.

பணிகளில் இன்று மனநிறைவு காணப்படாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று குழப்பமான மனநிலை காணப்படும். இந்த உணர்வை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். எனவே உங்கள் துணையிடம் அமைதியான முறையில் நடந்து கொள்வதும் மகிழ்ச்சியாக இருப்பதும் சிறந்தது.




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். சிறிதளவு முயற்சியில் அதிக வெற்றி காண்பீர்கள். இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

கடினமான பணிகளைக் கூடஎளிதாக ஆற்றுவீர்கள். உங்கள் உறுதி மற்றும் பொறுப்பு காரணமாக பணிகள் சுமூகமாக நடக்கும். திட்டமிடுவதன் மூலம் இது சாத்தியம்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்துகொள்வீர்கள். உங்கள் துணையை நட்கு புரிந்துகொண்டு நடந்து கொள்வீர்கள்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத பண வரவுகள் இன்று சாத்தியம்.




சுய முயற்சியில் நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்று காணப்படும் மகிழ்ச்சியும் திருப்தியும் உங்கள் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும்.

பணி வளர்ச்சி ஸ்திரமாக இருக்கும். உங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படும். நம்பிக்கையுடன் அதனை எற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் நகைச்சுவை உணர்வுடன் இருப்பீர்கள். எனவே செயல்கள் யாவும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணையும் உங்கள் அன்பை புரிந்துகொண்டு நடப்பார். இதனால் உறவில் திருப்தி நிலவும்.

இன்று உங்களிடம் கணிசமான தொகை காணப்படும். அந்தப் பணம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். யோகா அல்லது தியானம் மேற்கொள்வது சிறந்தது.




நல்ல சிந்தனை மூலம் சிறப்பான செயல்களுக்கு முயற்சி செய்வீர்கள். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும் சக பணியாளர்களுடன் சிறந்த முறையில் கலந்து பழகுவதன் மூலம் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் தகவல் பரிமாற்றத்தில் இடைவெளி காணப்படும். இதனால் இருவருக்கும் இடையிலான புரிந்துணர்வு பாதிப்படையும். எனவே இதனை தவிர்க்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் சம்பாதிப்பது கடினமாக காணப்படும். சிறந்த முறையில் திட்டமிடுவது உதவிகரமாக இருக்கும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும். சளி மற்றும் நரம்பு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




சில சமயங்களில் அமைதியின் மையை உணர்ந்தாலும் அறிவார்ந்த செயல்களை செய்யுங்கள். பொறுமை யான அணுகுமுறை மேற்கொண்டால் சிறந்தது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும்.

சில குடும்ப பிரச்சினை காரணமாக உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும்.உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள்.




உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக் கும். நீங்கள் உங்கள் நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

பணியிடத்தில் நல்ல பலன்கள் காணப்படும். மேலதிகாரிகளின் ஆதர வைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு பயனுள்ள முதலீடுகளை செய்யுங்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் இருக்கும். உடற்பயிற்சி மூலம் நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.




பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மன ஆறுதலை அளிக்கும். விவேகமான அணுகுமுறை மேற் கொள்வது நல்லது.

பணிநிமித்தமான பயணம் காணப்படுகின்றது. சிறந்த திட்டமிடல் மூலம் ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள துணையிடம் வன்மையாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவை பராமரிக்க அத்தகைய வன்மை உணர்வை தவிர்ப்பது நல்லது.

பண வரவு சுமாராக இருக்கும். கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள்கள் மற்றும் கணுக்கால்களில் வலி ஏற்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று உறுதியுடன் இருக்க வேண்டிய நாள். நீங்கள் எடுக்கும் எந்த நடவடிக் கையையும் கவனமாக ஆற்றினால் வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும். சக பணியாளர்களுடன் அனுசரித்து செல்வதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் இன்று அமைதியிழந்து உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். எனவே இதனை தவிர்த்து அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் பணத்தை இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாளவும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவுகளை உட்கொள்ள வேண்டாம். மன உளைச்சலுக்கு இடம் அளிக்காதீர்கள்

# இன்றைய ராசி பலன்கள் - 23.05.2024




ஆன்மீக ஈடுபாடு நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். இதுவே உங்களின் எதிர்கால போக்காக ஆகிவிடும்.

உங்கள் வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும் சில தருணங்களைக் காண்பீர்கள். எனவே முன் ஜாக்கிரதையாக விழிப்புடன் அதனை எதிர்கொள்ள தயாராகுங்கள்.

உங்கள் துணையிடம் தேவையின்றி உணர்ச்சிவசப்படுவீர்கள். எனவே உங்களின் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். செலவுகளை கட்டுபடுத்தும் வகைகளை கண்டறிய முயல வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உங்கள் பதட்டங்களை கட்டுப்படுத்தினால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் உற்சாகமான மகிழ்ச்சியான நாளாக இருக்கும்.எனவே மகிழ்ச்சியுடன் இன்றைய நாளை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

பணியில் முன்னேற்றங்கள் காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

குடும்பத்தை அனுசரித்துப் போவதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கலாம். மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

இன்று உங்கள் சேமிப்பின் மூலம் பண வரவு காணப்படும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாத வரையில் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிந்திப்பதை நிறுத்தி விட்டு செயல்களில் ஈடுபடுங்கள்.




நீங்கள் எந்த விஷயத்தையும் இன்று எளிதாக எடுத்துக் கொண்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் எளிதில் நிறைவேறும்.

பணியிடத்தில் முன்னணியில் இருப்பீர்கள். உங்கள் முயற்சிக்குப் பாராட்டு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நீங்கள் மற்ற ஜோடிகளுக்கு உதாரணமாக திகழ்வீர்கள்.

எதிர்பாராத பண வரவு காணப்படும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். கவனமாக திட்டமிட வேண்டும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. உடற்பயிற்சி மேற்கொண்டால் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்துக் கொள்ளலாம்.




இன்று நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். சுலோகம் சொல்வது மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இது சாத்தியம்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்காது. அதிகமான பணிகள் உங்களுக்கு கடினமாக இருக்கும்.

குடும்ப பிரச்சினை காரணமாக அமைதியின்மை காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே ஒன்றாக அமர்ந்து பேசி பிரச்சினையை தீர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை ஏற்ற இறக்கங்களுடன் கானபப்படும். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி மற்றும் முதுகு வலி காரணமாக பதற்றம் ஏற்படலாம்.

